செய்தி வெளியீடு எண்: 382 நாள் : 15.07.2013

# <u>செய்திக்குறிப்பு</u>

**மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர்** அவர்களால் **15.07.2013** அன்று காலை **10.30** மணியளவில் வணிகவரித்துறை இணை ஆணையர்கள் மற்றும் துணை ஆணையர்களின் பணித்திறனாய்வு மேற்கொள்ளப்பட்டது. இத்துறையின் ஆய்வில் அரசுச்செயலர் **திரு.சுனீல் பாலீவால், இ.ஆ.ப.,** மற்றும் வணிகவரி ஆணையர் **மரு.க.மணிவாசன், இ.ஆ.ப.,** பங்கேற்றனர்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வணிகவரி வருவாயானது ஜீன் மாதத்தில் **8.13** சதவிகித வளர்ச்சியும் ஜீன் மாதம் வரையிலான நிதியாண்டில் **4.21** சதவிகித வளர்ச்சியும் அடைந்துள்ளதை சுட்டிக்காட்டி வருவாய் குறியீட்டினை அடைய வணிகவரி துறை அலுவலர்கள் அயராது பாடுபட வேண்டும் என அறிவுறுத்தியுள்ளார்கள். மாநில அளவில் எட்டப்பட்ட வளர்ச்சியானது அனைத்து கோட்டங்களின் அளவிலும் அனைத்து வரிவிதிப்பு வட்டங்களின் அளவிலும் ஈட்டப்படவேண்டும் என அறிவுறுத்தியுள்ளார்கள். இது தொடர்பாக அதிக வரி செலுத்துவோர் பிரிவில் உள்ள வணிகர்களின் நிலுவை வரிவிதிப்பு இனங்கள் மற்றும் செயலாக்கப்பிரிவின் முன் மொழிவுகள் ஆகியவற்றின் சிறப்பு கவனம் செலுத்தி இந்நிதியாண்டில் நடப்பு மாதம் வரையிலான வளர்ச்சி விகிதத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் அறிவுறுத்தியுள்ளார்கள்.

**மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா** அவர்களின் சமூக நல திட்டங்களுக்கும், இம்மாநிலத்தின் வளர்ச்சித்திட்டங்களுக்கும் தேவையான நிதியில் வணிக வருவாயின் வளர்ச்சி முக்கிய காரணியாக விளங்குவதால் வணிகவரித்துறை அலுவலர்கள் தமது பணிகளில் தீவிர கவனம் செலுத்தி வரிவருவாயை பெருக்க முழு முயற்சி மேற்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தியுள்ளார்கள்.

இப்பணிகளுள் வணிகர்களின் மாதாந்திர நமூனாக்களை கூர்ந்தாய்வு செய்தல், நிலுவையில் உள்ள செயலாக்கப்பிரிவின் முன் மொழிவுகளை விரைந்து செயல்படுத்துதல் ஆகியவற்றில் வரிவிதிப்பு வட்டங்கள் சிறப்பு கவனம் செலுத்த வேண்டும் என கேட்டுக்கொண்டுள்ளார்கள். மேலும், வரி ஏய்ப்பு செய்யும் வணிகர்கள் மற்றும் வாகன சோதனையில் கண்டறியப்படும் வரி ஏய்ப்பு இனங்கள் மீது கடும் நடவடிகை எடுக்கப்பட வேண்டும் என அறிவுரை வழங்கியுள்ளார்கள்.

வணிகவரித்துறையின் இரு பிரிவுகளும் போலி ரசீது கொடுத்து அரசுக்கு வருவாய் இழப்பீடு செய்பவர்கள் மீது ஒருங்கிணைந்த தொடர் நடவடிக்கை எடுத்தும் தவறான உள்ளீட்டு வரியினால் பயனடைபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுத்தும் அரசு வருவாயினை பாதுகாக்க வேண்டும் என அறிவுரை வழங்கியுள்ளார்கள். மேலும், இதற்கென தனியே ஒரு தணிக்கை குழு அமைக்கப்பட்டு, மாநில அளவில் இந்த இலக்கினை ஆய்வு செய்து 15 நாட்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டார்கள்.

மேலும், எதிர்மறை வளர்ச்சி மற்றும் குறைவான வளர்ச்சி அறியப்படும் வணிக இனங்களிலும், அதிக உள்ளீட்டு வரியினை கோரியுள்ள மற்றும் முன்கொணர்ந்த இனங்களிலும் கூர்ந்தாய்வு செய்து காரணங்களை கண்டறிந்து சட்ட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்கள். வணிகவரி கோட்ட அளவில் இணை ஆணையர்களும், துணை ஆணையர்களும் வரி நிலுவைகளை வசூலிக்கவும் மாதாந்திர நமுனாக்களை விடுதலின்றி வசூலிக்கவும், வரிவழக்குகளில் துரித நடவடிக்கை மேற்கொண்டு நிலுவையிலுள்ள வரிவருவாயை வசூலிக்கவும் அறிவுரை வழங்கியுள்ளார்கள். அனைத்து அலுவலர்களும் ஒருங்கிணைந்து செயல்பட்டு வருவாய் இலக்கினை அடையவேண்டும் என கேட்டுக்கொண்டு ஆய்வினை நிறைவு செய்தார்கள்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**